# உதவி அமர்வு நீதிமன்றம், சங்ககிரி

முன்னிலை : திரு. N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
உதவி அமர்வு நீதிபதி, சங்ககிரி

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசித் திங்கள் 21 ம் நாள் வியாழக்கிழமை
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ம் நாள் வியாழக்கிழமை

அமர்வு வழக்கு எண் 242/2024
CNR No: TNSA07-000781-2024

(02.09.2021-ஆம் நாளன்று சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II திரு. T. சுந்தர்ராஜன் பி.எ.,பி.எல்., (மு.கூ.பொ) அவர்களால் அம்மன்ற முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.1/2021 ஆன இவ்வழக்கு மேல் விசாரணைக்காக சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து உரிய விசாரணைக்கென இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| முறையிடுபவர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>மகுடஞ்சாவடி காவல் நிலைய<br>குற்ற எண். 273/2019 |
| எதிரி | கோபி, த/பெ. கோபால், ஏரிக்கடை பேருந்து நிறுத்தம், வாத்தியார் காடு, ஏகாபுரம் கிராமம், சங்ககிரி வட்டம்.<br>தற்போதைய வசிப்பிடம் நியூரோ பவுன்டேசன் மருத்துவமனைக்கு எதிரில், தெற்கு தெரு, 3 ரோடு, சேலம் நகரம். |
| முறையிடுபவர் தரப்பு வழக்கறிஞர் | திரு.S.கிறிஸ்டோபர்<br>(அரசு குற்றத்துறை கூடுதல் வழக்கறிஞர்) |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. S. தர்மேந்திரா, திரு. S. குமரேசன்,<br>திரு. R. சுரேஷ் |
| குற்றச்சாட்டுகள் | 1. திட்டமிட்டு வழிமறுத்தி தடுத்து நிறுத்துதல், இதச பிரிவு 341<br>2. வன்முறையுடன் கொள்ளை இதச பிரிவு 392<br>3. ஆயுதத்தால் கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொள்ளை, இதச பிரிவு 397<br>4. கொலை மிரட்டல் விடுத்த செயல், இதச பிரிவு 506 (2) |
| எதிரிகளின் கூற்று | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் முடிவு | முடிவாக, இதச பிரிவு 341, 392, 397 மற்றும் 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்தவரை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறியதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவர் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரிகளை குவிமுச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் C.P.2/2025 ல் ஆஜர்படுத்தப்பட்டு சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மரகைப்பிடி சுமார் 11 செ.மீ, இரும்பு பகுதி சுமார் 17 செ.மீ. கத்தியை மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அழிக்கவும், அதேபோல் சா.பொ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள ரூ.5500/-பணத்தை மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அரசுக்கு ஆதாயமாக்கிக்கொள்ள வேண்டும் என்றும், மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அவர் எழுதிக்கொடுத்த பிணைமுறை தானாகவே ரத்தாகிவிடும் எனவும் குவிமுச பிரிவு 452ன்படி இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இவ்வழக்கு இறுதியான விசாரணைக்கு 04.03.2026 ம் தேதியன்று எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், அரசுக்காக அரசு வழக்கறிஞர் திரு.S.கிறிஸ்டோபர் அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திருவாளர்கள் S. தர்மேந்திரா, S. குமரேசன், R. சுரேஷ் ஆகியோர்கள் ஆஜராகியும், அரசு தரப்பு, எதிரி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய விசாரணையில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

<u>தீர்ப்புரை</u>

கடந்த 13.06.2019ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வாரி பேக்கரி அருகில், தப்பக்குட்டை பிரிவு ரோட்டில் பஸ் ஏறுவதற்காக சாட்சி வெங்கடேஷ் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, எதிரி மேற்கண்ட வெங்கடேஷ் என்பவரை கத்தியை காட்டி வழிமறுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள், அதே நேரம் எதிரி, சாட்சி வெங்கடேஷ் இடம் கத்தியை காட்டி மிரட்டி உன்னுடைய பாக்கெட்டில் உள்ள பணத்தை எடுத்துக்கொடுடா என்றும், இளம்பிள்ளை கோபால் மகன் கோபி என்று என் பெயரைக் கேட்டாலே இந்த பகுதியில் உள்ளவர்கள் நடுங்குவார்கள், என்னை எதுத்து பேசிறியா என்று சொல்லி சாட்சியின் சட்டை மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.7,000/-ஐ பறித்து கொள்ளையடித்துவிட்டதாகவும், மேலும், அதே நாள், அதே நேரம் எதிரி சாட்சியின் பணத்தை எடுத்தவுடன் சாட்சி தனது பணத்தை பிடுங்கிட்டான் என்று சத்தம் போட்டவுடன் அருகிலிருந்தவர்கள் ஓடி வரவே எதிரி கத்தியை காட்டி டேய் யாராச்சும் கிட்டே வந்தீங்கன்னா உங்களை குத்திவிடுவேன், உயிரோடு வீட்டுக்கு போகமாட்டீங்க என கொலை செய்யும் நோக்கில் மிரட்டியதாகவும், இந்த மேற்படி செயல்களால் இதச பிரிவுகள் 341, 392, 397 மற்றும் 506 (2)-ன் கீழ் எதிரி குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரி மீது மகுடஞ்சாவடி காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு ஏற்கனவே நீதித்துறை நடுவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. அக்குற்ற இறுதியறிக்கையை சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II-ல் PRC No. 1/2021 என 08.02.2021 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையானதும், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு வழங்கி இவ்வழக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பதால், சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II நீதிமன்றத்தின் 02.09.2021 ம் தேதியிட்ட உத்தரவின் படி மேல் விசாரணைக்கு குவிமுச பிரிவு 209(அ)-ன் கீழ் அனுப்பி வைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் இந்நீதிமன்ற விசாரணைக்கு இவ்வழக்கு கோப்புகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

3) இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானதும், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், எதிரி மீதான குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், குவிமுச பிரிவு 226-ன் கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, எதிரி தரப்பு வழக்கறிஞர் மற்றும் அரசு கூடுதல் வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதங்கள் கேட்டபின் எதிரியின் மீது இதச பிரிவு 341, 392, 397, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து படித்துக்காட்டி விளக்கிக் கேட்க எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி அல்ல என்றும், சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4) எதிரி குற்றச்சாட்டை மறுத்ததால் அரசு தரப்பில் தமது தரப்பு வழக்கை நிரூபிக்க மொத்தம் 8 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருள் 1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியங்களிலிருந்து தெரியவரும் வழக்கின் சாராம்சங்கள் பின்வருமாறு -

5) அ.சா.1 திரு. வெங்கடேஷ் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2019 ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில்லை என்றும், ஒரு நாள் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.7,000/-த்தை காணவில்லை என்றும், அதுசம்பந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், அந்த புகாரில் அடையாளம் தெரியாத நபர் தன்னிடம் இருந்த பணத்தை பிடுங்கி சென்றுவிட்டதாகவும், அதை மீட்டு தருமாறு புகார் கொடுத்தேன் என்றும், புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள பணத்தைதான் தன்னிடமிருந்து பிடுங்கி சென்றார் என்றும், தன்னிடம் பணத்தை பிடுங்கிய நபர் ஆஜர் எதிரியா என்றால் தனக்கு நினைவில்லை என்றும், புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6) அ.சா.2 திரு. பச்சமுத்து தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தேதி, மாதம், வருடம் நினைவில்லை என்றும், தங்கள் ஊரைச் சேர்ந்த கண்ணன் என்பவருடன் மதியம் 12.00 மணிக்கு தன் வீட்டிலிருந்து இளம்பிள்ளைக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றபோது காகாபாளையம் ரோட்டில் கூட்டமாக ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அங்கிருந்த வெங்கடேஷ் என்பவர் யாரோ ஒருவர் தன்னிடம் இருந்த பணத்தை பிடுங்கி சென்றுவிட்டதாக தன்னிடம் சொன்னார் என்றும், சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொன்னார் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 13.06.2019 ம் தேதியன்று இளம்பிள்ளையில் நடந்த ஒரு வழிப்பறி வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடன் இருந்து பார்வை மகஜரில் தானும், யாரபீயும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அது அ.சா.ஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் துணிக்கடை வைத்து நடத்தி வருவதாகவும், தனக்கு எதிரியை பற்றியும், சம்பவம் பற்றியும் தெரியாது எனவும், சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு தன் கடையிலிருந்து வீட்டிற்கு செல்லும் வழியில் வாரி பேக்கரி அருகில் கூட்டமாக பலர் நின்று கொண்டிருந்ததாகவும், தான் வண்டியை நிறுத்தி விசாரித்தபோது தனக்கு தெரிந்த போலீசார் ஒருவர் அங்கிருந்ததாகவும், தன்னிடம் கையெழுத்து கேட்டதால் கையெழுத்து செய்து கொர்டுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சொல்லி பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

8) அ.சா.5, அ.சா.6 தங்களது சாட்சியத்தில், தாங்கள் நெசவுத் தொழில் செய்து வருவதாகவும், தங்களுக்கு எதிரியை பற்றியும், சம்பவம் பற்றியும் தெரியாது எனவும், தங்களிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது மற்றும் இரண்டாவது கையெழுத்து தங்களதுதான் எனவும், அவை முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.5 என்றும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தங்களுடைடையதுதான் எனவும், அவை முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.6 என்றும், அந்த கையெழுத்துக்களை தாங்கள் உறவினருடன் மகுடஞ்சாவடி காவல் நிலையம் சென்றபோது போலீசார் தங்களிடம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என சொல்லி பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

9) அ.சா.7 திரு.மணிமேகலன், தனது சாட்சியத்தில் கடந்த 13.06.2019 ம் தேதியன்று மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று

மாலை சுமார் 4.30 மணிக்கு ஏகாபுரம் கிராமம், கலியகவுண்டனுரைச் சேர்ந்த மல்லாகவுண்டர் மகன் வெங்கடேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று மகுடஞ்சாவடி காவல் நிலைய குற்ற எண்.273/2019 இதசபிரிவுகள் 341, 392, 397 மற்றும் 506(2) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அதன்பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலினை சங்ககிரி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பியது பற்றியும், வழக்கு கோப்பினை ஆய்வாளர் வசம் புலன் விசாரணைக்காக ஒப்படைத்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

10) அ.சா.8 திரு. சசிகுமார், தனது சாட்சியத்தில் கடந்த 13.06.2019 ம் தேதி மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, மகுடஞ்சாவடி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமேகலன் என்பவர் பதிவு செய்து கொடுத்த முதல் தகவல் அறிக்கையினை பெற்று, இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடத்தில் எதிரி மிரட்டியதாக சொல்லப்படும் கத்தியையும், பணத்தையும் கைப்பற்றியது பற்றியும், பின்பு எதிரியை கண்டுபிடித்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது பற்றியும், புலன் விசாரணை முடித்து கடந்த 25.12.2019 ஆம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

11) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்ற பின் எதிரிக்கு பாதகமான சூழ்நிலையில் உள்ள சாட்சியங்களை கேள்விகளாக தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது எதிரி மேற்படி சாட்சியம் பொய்யானது என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

12) <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும் :-</u>

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் இதச பிரிவுகள் 341, 392, 397 மற்றும் 506(2) கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்பிக்கும் பொருட்டு அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை இந்நீதிமன்றம் கவனமுடன் பரிசீலித்ததில், இந்த வழக்கின் சம்பவம் தொடர்பாக அ.சா.1 வெங்கடேஷ் கடந்த 13.06.2019 தேதியன்று மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி புகார் கொடுத்து, அப்புகாரை பெற்று மேற்படி காவல் நிலைய குற்ற எண். 273/2019 இதச பிரிவுகள் 341, 392, 397 மற்றும் 506 (2) கீழ் அ.சா.7 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணிமேகலன் அவர்களால் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

13) அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கை அ.சா.8 தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடம் சென்று, சம்பவ இடத்திலிருந்த சாட்சிகளான உதயகுமார், யாரபீ ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு சம்பவயிடத்திலிருந்த சாட்சிகள் வெங்கடேசன், கண்ணன், பச்சமுத்து, உதயகுமார், யாரபீ ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு, 14.06.2019ம் தேதியன்று காலை 9.15 மணிக்கு எதிரி கோபியை நல்லணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அன்பழகன், வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அப்போது எதிரி வைத்திருந்த ரூ.5,500/- மற்றும் 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மர கைப்பிடி போட்ட கத்தியை சாட்சிகள் அன்பழகன், வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14) பின்பு அ.சா.8 எதிரி மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து, எதிரிகளையும், கைப்பற்றிய சொத்துகளையும் படிவம் 95ன் மூலம் தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினமே இரவு 7.00 மணிக்கு வெங்கடேஷ் என்பவரை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கோபி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கடந்த 20.06.2019ம் தேதியன்று சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணிமேகலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரி வைத்திருந்த பணம் ரூ.5,500/- மற்றும் 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மர கைப்பிடி போட்ட கத்தி ஆகியவை சா.பொ.1 மற்றும் ச.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு வழக்கின் புலன் விசாரணை முடிந்து எதிரி கோபி மீது இதச பிரிவுகள் 341, 392, 397 மற்றும் 506 (2) கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

15) எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை மெய்பிக்கும் பொருட்டு இவ்வழக்கின் சம்பவம் பற்றி வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் வெங்கடேஷ் என்பவர் அ.சா.1 ஆக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ஒரு நாள் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.7,000/-த்தை அடையாளம் தெரியாத நபர் தன்னிடம் இருந்து பிடுங்கி சென்றுவிட்டதாகவும், அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், பணத்தை பிடுங்கிய நபர் ஆஜர் எதிரிதானா என்றால், தனக்கு நினைவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட பச்சமுத்து தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ஆன உதயகுமார் என்பவர் தனது சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும்,

கேள்விபட்டதாக மட்டும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா. 4 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் ஆஜர் எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி தங்களுக்கு தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர்.

16) இந்நிலையில், அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான மகுடஞ்சாவடி காவல் நிலைய ஆய்வாளர் சசிகுமார் அவர்கள் தனது சாட்சியத்தில் கடந்த 13.06.2019 ம் தேதியன்று மாலை 5.30 மணிக்கு சம்பவயிடம் சென்று, சம்பவ இடத்திலிருந்த சாட்சிகளான உதயகுமார், யாரபீ ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததோடு, சம்பவயிடத்திலிருந்த சாட்சிகளான வெங்கடேசன், கண்ணன், பச்சமுத்து, உதயகுமார், யாரபீ ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு, 14.06.2019 ம் தேதியன்று காலை 9.15 மணிக்கு எதிரி கோபியை நல்லணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அன்பழகன், வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அப்போது எதிரி வைத்திருந்த பணம் ரூ.5,500/- மற்றும் 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மர கைப்பிடி போட்ட கத்தியை சாட்சிகள் அன்பழகன், வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், தான் கைது செய்த எதிரியையும், கைப்பற்றிய வழக்கு சொத்துகளையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் அன்றைய தினமே இரவு 7.00 மணிக்கு வெங்கடேஷ் என்பவரை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கோபி என்பவரை மீண்டும் விசாரித்து மனு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 20.06.2019 ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணிமேகலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், குற்ற இறுதி அறிக்கை சமர்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

17) இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 341-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்தவரை எதிரி திட்டமிட்டு தடுத்து நிறுத்தி, அ.சா.1 யிடம் வழிப்பறி செய்தார் என்று மெய்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆனால், இவ்வழக்கின் சம்பவ சாட்சிகள் அ.சா.1-யை எதிரி வழிப்பறி செய்தார் என்று சாட்சியம் அளிக்க தவறியுள்ளதோடு, பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.ஆ.1 புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அப்புகார் உண்மையானதுதானா என்பதிலும் பலத்த சந்தேகம் எழுகின்றது. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்பிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றத்தால் கருத இயலவில்லை.

18) அதே போல் இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 392-ன் கீழான

வன்முறையுடன் கொள்ளை குற்றச்சாட்டை பொறுத்தவரை எதிரி அ.சா.1 யிடம் வன்முறை செய்து கொள்ளை அடித்தார் என்று மெய்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆனால், இது சம்பந்தமாக அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னிடம் பணத்தை பிடுங்கிய நபர் ஆஜர் எதிரிதானா என்றால், தனக்கு நினைவில்லை என்றும், அ.சா.4 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே, இந்த வழக்கை பொறுத்தவரை எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

19) அதே போல் இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 397-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்த வரை எதிரி அ.சா.1 ஐ ஆயுதத்தால் கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொள்ளை செய்ய முயன்றார் என்பது மெய்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆனால், இது சம்பந்தமாக அ.சா.3 முதல் அ.சா.6 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி தங்களது எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கை பொறுத்தவரை புகார்தாரரான அ.சா.1 ம் அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்று குறிப்பிட்டுள்ளதாலும், போலீஸ் சாட்சிகளான அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர்களின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுவிட்டதாக கருத இயலாது. ஆகவே, இந்த வழக்கை பொறுத்தவரை எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

20) இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 506 (2)இன்கீழான குற்றச்சாட்டை பொறுத்தவரை எதிரி எவரையேனும் மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்படுத்திவிடுவேன் எனச் சொல்லி அச்சுறுத்தியதாக மெய்பிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு எதிரி மீதான குற்றசாட்டை மெய்பிக்கும் பொருட்டு விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவத்தின்போது கத்தியை மிரட்டி பணம் பிடுங்கி சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்திருந்தாலும் அச்செய்கையின் மூலம் தான் உயிருக்கு பயந்து அச்சுறுத்தலுக்கு ஆளாகிவிட்டதாக அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே, எதிரியின் செய்கையால் எவருக்கேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக அரசு தரப்பில் மெய்பிக்கப்படாத நிலையில் எதிரி இதச பிரிவு 506 (2)ன் கீழ் குற்றவாளி இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

21) <u>தீர்வு:-</u>

முடிவாக, இதச பிரிவு 341, 392, 397 மற்றும் 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகளை

பொறுத்தவரை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறியதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவர் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் C.P.2/2025 ல் ஆஜர்படுத்தப்பட்டு சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருளான 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மரகைப்பிடி சுமார் 11 செ.மீ, இரும்பு பகுதி சுமார் 17 செ.மீ. கத்தியை மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அழிக்கவும், அதேபோல் சா.பொ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள ரூ.5500/-யை மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அரசுக்கு ஆதாயமாக்கிக்கொள்ள வேண்டும் என்றும், மேல்முறையீடு காலம் முடிந்தபிறகு அவர் எழுதிக்கொடுத்த பிணைமுறை தானாகவே ரத்தாகிவிடும் எனவும் குவிமுச பிரிவு 452 ன்படி இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்த பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.05 19:14:27 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்ககிரி.

<u>இணைப்பு :-</u>

(1) <u>அரசு தரப்பு சாட்சிப்பட்டியல்</u>:-

அ.சா.1 .. திரு. வெங்கடேஷ்
அ.சா.2 .. திரு. பச்சமுத்து
அ.சா.3 .. திரு. உதயகுமார்
அ.சா.4 .. திரு. கோபி
அ.சா.5 .. திரு. அன்பழகன்
அ.சா.6 .. திரு. வெங்கடேஷ்
அ.சா.7 .. திரு. மணிமேகலன், ஓய்வு சிறப்பு காவல் உதவிஆய்வாளர்
அ.சா.8 .. திரு. சசிகுமார், காவல் உதவி ஆய்வாளர்.

(2) <u>எதிரிகள் தரப்பு சாட்சிப்பட்டியல்</u> :- இல்லை

(3) <u>அரசு தரப்பு சான்றாவணப்பட்டியல்</u>:-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.06.2019 | அ.சா.1 வெங்கடேஷ் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 13.06.2019 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 14.06.2019 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 14.06.2019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 14.06.2019 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | 14.06.2019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | 13.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 13.06.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | 14.06.2019 | கைப்பற்று மகஜர் நாள்.14.06.2019, நேரம் 11.15 மணி |

(4) எதிரிகள் தரப்பு சான்றாவணப்பட்டியல் :- இல்லை

(5) அரசு தரப்பு சான்றுபொருள்கள் பட்டியல் :-

சா.பொ.1 .. பணம் ரூ.5,500/-

சா.பொ.2 .. 28 செ.மீ நீளமுள்ள இரும்பு பூனுடன் கூடிய மர கைப்பிடி போட்ட கத்தி

(6) எதிரி தரப்பு சான்றுபொருள்கள் பட்டியல் :- எதுவுமில்லை

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.05 19:15:08 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சங்ககிரி.

குறிப்பு:-

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.
2. இவ்வழக்கில் சாட்சியை விசாரணைகாலத்தில் மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.